செய்தி வெளியீடு எண்: 390 நாள்:06.07.2021

## செய்தி வெளியீடு

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(07.07.2021) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த தினமான ஜூலை 7ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்டு, அம்மக்களுக்கு குடியிருக்க வீட்டுமனைப் பட்டாக்களும், விவசாயம் செய்வதற்கு நிலங்களும், குழந்தைகளுக்கு கல்வி வசதியும் பெற்றுத்தந்தார். பஞ்சமி நிலங்களை மீட்டார். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1895ஆம் ஆண்டு சென்னை வந்த ஆங்கிலேய அதிகாரி வைஸ்ராய் லார்டு எல்சின் என்பவரிடம் மக்களுடன் நேரில் சென்று கோரிக்கை மனு அளித்தார்.

தமிழக அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(7.7.2021) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள், மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9